IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE,
KATPADI, VELLORE DISTRICT.

C.C.NO.41/2024

DEPOSITION OF WITNESS P.W.1

| | | |
|---|---|---|
| NAME | : | PURUSOTHAMAN |
| FATHER'S NAME | : | VELU |
| VILLAGE | : | SEVUR |
| OCCUPATION | : | ATTENDER |
| AGE | : | 70 |

Solemnly affirmed in accordance with the provisions of Section 3 and 4 of the Indian Oaths Act 1969, r/w rule 35 and 36 of Criminal Rules of Practice 2019 of the 18th day of AUGUST 2025.

**சாட்சிக்கு நீதிமன்ற ஊழியரால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் பதிவு செய்யப்படுகிறது.**

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை:**

நான் தற்போது சேவூரில் வசித்து வருகிறேன். கரிகிரி மருத்துவமனையில் பணியாற்றி ஓய்வு பெற்றுள்ளேன். தற்போது வயது மூப்பின் காரணமாக வீட்டின் உள்ளேன். விபத்தில் இறந்து போன சாம்சன் எனது இளைய மகன். 27.09.2021 ம் தேதி எனது மகன் சிஎம்சி மருத்துவமனையில் வேலை செய்து கொண்டிருந்தார். பணி முடித்து சிஎம்சி மரு்ததுவமனையில்இருந்து சேவூர் நோக்கி புல்லட்இருசக்கர வாகனத்தில் வந்து கொண்டிருக்கும்போது விஐடி மெயின் கேட்டை அருகே வரும்போது ஒருவர் வந்து இடித்துவிட்டார் என அங்கிருந்தவர்கள் எனக்கு போன் மூலமாக தகவல் சொன்னார்கள். நானும் எனது மனைவியும் சம்பவ இடம் சென்று பார்த்து போது எனது மகன் தலையில் அடிப்பட்டு மயங்கிய நிலையில் காணப்பட்டார். பின்னர் ஆம்புலன்ஸ்மாக வேலூர் சிஎம்சி மருத்துவமனைக்க சிகிச்ைசக்காக அழைத்து சென்றோம். அங்கு மருத்துவர்கள் பரிசோதித்து விட்டு எனது மகன் ஏற்கனவே இறந்துவிட்டார் என்று தகவல் சொன்னார்கள். பின்னாளில் சோமோடோ விநியோகம் செய்பவர் விபத்து ஏற்படுத்தியதாக கேள்வி பட்டேன். சம்பவம் தொடர்பாக நான் புகார் மனு கொடுத்தேன். என்னிடம் புகார் மனு என்னுடையது தான். அது **அ.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

விபத்து சம்பந்தமாக தகவல் சொல்லிதான் தெரியும். புகாரை அ ன்றை கொடுத்தேன். வாகனத்தின் பதிவு எண் போலிசார் தெரியும். புகார் கொடுத்த பின் போலிசார் விசாரிக்கவில்லை என்றால் சரிதான்.

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE,
KATPADI, VELLORE DISTRICT.

C.C.NO.41/2024

DEPOSITION OF WITNESS P.W.2

| | | |
|---|---|---|
| NAME | : | CHELLADURAI |
| FATHER'S NAME | : | RAJARATHINAM |
| VILLAGE | : | SEVUR |
| OCCUPATION | : | PASTOR |
| AGE | : | 47 |

Solemnly affirmed in accordance with the provisions of Section 3 and 4 of the Indian Oaths Act 1969, r/w rule 35 and 36 of Criminal Rules of Practice 2019 of the 18th day of AUGUST 2025.

**சாட்சிக்கு நீதிமன்ற ஊழியரால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் பதிவு செய்யப்படுகிறது.**

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை:**

நான் தற்போது சேவூரில் வசித்து வருகிறேன். கிறிஸ்தவர் பாதிரியாக இருந்து வரகிறேன். அ.சா.1 தெரியும் அவர் எனது நண்பர். விபத்தில் இறந்து போன சாம்சன் என்பவரை தெரியும். 27.09.2021 ம்தேதி நான் எனது கிராமத்தில் இருந்தபோது இரவு 8.20 மணிக்கு ஊரில் இருந்தபோது விபத்து பற்றி கேள்வி பட்டு விஜடி மெயின் கேட்டை அருகே சென்று பார்த்தேன்.சம்பவ இடத்தில் சாம்சன் அடிப்பட்டுகீழே விழுந்து கிடந்தார் , அவருக்கு தலையில் அடிப்பட்டு இருந்து. சம்பவ இடத்தில் புல்லட் வாகனம் இருந்தது.மற்றொரு ஆக்டிவா வாகனம் இருந்தது. பின்னர் காயம்பட்டவரை மீட்டு வேலூர் சிஎம்சி மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். பின்னர் அன்றைய தினம் சாம்சன் இறந்து விட்டதாக தகவல் வந்தது. இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள். பின்னாளில் ஆக்டிவா இருசக்கர வாகனம் மோதி விபத்து ஏற்பட்டதாக அறிந்துகொண்டேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

விபத்து சம்பந்தமாக தகவல் சொல்லிதான் தெரியும். பிரேத்தனை பெறுவதற்காக காவல் நிலையம் சென்று அங்க கையொப்பம் பெற்றார்கள் என்றால் சரிதான். போலிசார் விசாரிக்கவில்லை என்றால் சரிதான்.

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE,
KATPADI, VELLORE DISTRICT.

C.C.NO.41/2024

DEPOSITION OF WITNESS P.W.3

| | | |
|---|---|---|
| NAME | : | ROBINRAJKUMAR |
| FATHER'S NAME | : | JEYAKAMBIRAN |
| VILLAGE | : | BRAMAPURAM |
| OCCUPATION | : | DRIVER |
| AGE | : | 40 |

Solemnly affirmed in accordance with the provisions of Section 3 and 4 of the Indian Oaths Act 1969, r/w rule 35 and 36 of Criminal Rules of Practice 2019 of the 18th day of AUGUST 2025.

**சாட்சிக்கு நீதிமன்ற ஊழியரால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் பதிவு செய்யப்படுகிறது.**

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை:**

நான் தற்போது பிரம்மபுரத்தில் வசித்து வருகிறேன்.டிரைவராக வேலை செய்து வருகிறேன். அ.சா.1 ,அ.சா.2 யை தெரியும். விபத்தில் இறந்து போன சாம்சன் என்பவரை தெரியும். 27.09.2021 ம்தேதி நான் என்னுடைய வழக்கமான பணிக்க சென்றிருந்தேன். அன்றைய தினம் இரவு 8.30 மணியளவில் இறந்து போன சாம்சன் என்பவரின் தாயார் செல்வி எனக்க போன் மூலமாக தன் மகனுக்கு விபத்து ஏற்பட்டதாக தகவல் சொன்னார். பின்னர் நான் என் மனைவியும் சம்பவம் இடம் சென்று பார்த்த போது ராயல் என்பில்ட் வாகனமும், ஆக்டிவா வாகனமும் இருந்தது. சாம்சானை மருத்துவமனைக்க அழைத்து சென்று இருந்தார்கள்.நான் சிஎம்சி மருத்துவமனைக்கு சென்று பார்த்த போது இறந்த நிலையில் காணப்பட்டார். பின்னர் போலிசார் உடற்கூராய்வு செய்வது சம்பந்தமாக என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

விபத்து சம்பந்தமாக தகவல் சொல்லிதான் தெரியும். பிரேதத்தனை பெறுவதற்காக காவல் நிலையம் சென்று அங்கு கையொப்பம் பெற்றார்கள் என்றால் சரியல்ல. சிஎம்சி மருத்துவமனையில் கையொப்பம் செய்தேன்.. போலிசார் விசாரித்தார்கள். என்றால் சரிதான்.

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE,
KATPADI, VELLORE DISTRICT.

C.C.NO.41/2024

DEPOSITION OF WITNESS P.W.4

| | | |
|---|---|---|
| NAME | : | SAKAYAM |
| FATHER'S NAME | : | ANDHONYRAJ |
| VILLAGE | : | SEVUR |
| OCCUPATION | : | CARPENTER |
| AGE | : | 60 |

Solemnly affirmed in accordance with the provisions of Section 3 and 4 of the Indian Oaths Act 1969, r/w rule 35 and 36 of Criminal Rules of Practice 2019 of the 18th day of AUGUST 2025.

**சாட்சிக்கு நீதிமன்ற ஊழியரால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் பதிவு செய்யப்படுகிறது.**

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை:**

நான் தற்போது சேவூரில் வசித்து வருகிறேன். மரத்தச்சராக வேலை செய்து வருகிறேன். அ.சா.1 ,அ.சா.2 யை தெரியும். விபத்தில் இறந்து போன சாம்சன் என்பவரை தெரியும். 27.09.2021 ம்தேதி நான் என் வீட்டில் சாப்பிட்டு கொண்டிருந்த போது இரவு 8.30 மணியளவில் விபத்து ஏற்பட்டதை தெரிநது கொண்டு விஜடி மெயின் கேட்டை அருகே சென்று பார்த்த போது சம்பவ இடத்தில் ராயல் என்பில்ட் வாகனமும், ஆக்டிவா வாகனமும் இருந்தது.சம்பவ இடத்தில் கூட்டமாகவும் காவல் துறை சார்ந்தவர்களும் இருந்தார்கள்.பின்னர் அன்றைய தினமே சிஎம்சி மருத்துவமனைக்கு சென்று பார்த்த போது இறந்த நிலையில் காணப்பட்டார். பின்னர் உடற்கூராய்வு செய்வதற்காக வேலூர் அடுக்கம்பாறை மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். மறுநாள் என்னை போலிசார் விசாரித்தார்கள்.விபத்தை ஏற்படுத்தியவர் உணவு விநியோகம் செய்பவர் என்று பின்னாளில் தெரிந்து ெ◌ காண் டேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

விபத்து சம்பந்தமாக தகவல் சொல்லிதான் தெரியும். பிரேதத்தனை பெறுவதற்காக காவல் நிலையம் சென்று அங்கு கையொப்பம் பெற்றார்கள் என்றால் சரிதான். போலிசார் அங் கே விசாரித்தார்கள்.

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE,
KATPADI, VELLORE DISTRICT.

C.C.NO.41/2024

DEPOSITION OF WITNESS P.W.5

| | | |
|---|---|---|
| NAME | : | PAULSON |
| FATHER'S NAME | : | PURUSOTHAMAN |
| VILLAGE | : | SEVUR |
| OCCUPATION | : | TECHNICIAN |
| AGE | : | 32 |

Solemnly affirmed in accordance with the provisions of Section 3 and 4 of the Indian Oaths Act 1969, r/w rule 35 and 36 of Criminal Rules of Practice 2019 of the 18th day of AUGUST 2025.

**சாட்சிக்கு நீதிமன்ற ஊழியரால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் பதிவு செய்யப்படுகிறது.**

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை:**

நான் தற்போது சேவூரில் வசித்து வருகிறேன். சென்னை சங்கர நேத்திரலாய மருத்துவமனையில் தொழில்நுட்ப பிரிவில் வேலை செய்து வருகிறேன். அ.சா.1 எனது தந்தை. விபத்தில் இறந்து போன சாம்சன் என்பவர் எனது தம்பி. 27.09.2021 ம்தேதி நான் என் வீட்டில் இருந்த போது என்னுடைய தம்பியின் நண்பர் எனக்கு போன் மூலமாக தகவல்சொன்னார். நான் சம்ப இடம் சென்று பார்த்தேன். என்னுடைய தம்பி சுய நினைவின்றி இருந்தார். அவருக்கு மூக்கு, காது ,வாயில் இருந்து இரத்தம் வந்து கொண்டிருந்தது. சம்பவ இடத்தில் சோமோடோ விநியோகம் செய்பவர்கள் கூட்டமாக இருந்தார்கள். பின்னர் ஆம்புலன்ஸ் மூலமாக எனது தம்பியை சிஎம்சி மருத்துவமைனக்கு அழைத்து சென்றோம். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையமது தான் அது அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் சம்பவ இடத்தை விசாரித்து அளவீடு செய்து கொண்டிருந்தார்கள் என்னுடன் முத்து என்பவரும் கையொப்பம் செய்தார்.போலிசார் விபத்து வழக்கு சம்பந்தமாக விசாரித்து கொண்டிருந்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

காவல் நிலையத்தில் புகார் கொடுக்க எனது தந்தையுடன் நானும் சென்றேன் அப்போது போலிசார் என்னிடமும் கையொப்பம் பெற்றார்கள். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

இந்த உத்தரவு என்னால் தட்டச்சருக்கு நேரடியாகச் சொல்லப்பட்டு, அவரால் உடனுக்குடன் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைகள் திருத்தம் செய்யப்பட்டு இன்று 18.08.2025 ஆம் தேதி பகரப்பட்டது.

S K P DILIP BABU Digitally signed by S K P DILIP BABU

நீதித்துறை நடுவர்,
காட்பாடி.